## <u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி MBA., LLM.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

2026–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 6–ஆம் நாள், வெள்ளிக்கிழமை

**<u>இ.ம.எண். 16 /2026 இன் அ.வ.எண்.558/2004</u>**

**<u>CNR No. TNSA13-000101-2004</u>**

1. ராஜகோபால்
2. சந்திரன்
3. ராஜேந்திரன்
4. ராஜமாணிக்கம் (இறந்தவர்)
5. முருகேசன்

அனைவரும், தங்களுக்காகவும் நாவக்குறிச்சி
கிராம ஜங்கமர் சமுதாயத்திற்காகவும் . . . மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. பழனிமுத்து கவுண்டர் (இறந்தவர்)
2. ஸ்ரீராமன்
3. சின்னு
4. பாலு
5. தங்கராசு (இறந்தவர்)
6. முத்துசாமி . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 06.02.2026–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 மற்றும் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.R.ராஜேந்திர மகஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவுடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை குறித்த காலத்தில் ஒப்படைக்காத காலதாமதத்தை மன்னித்து ஏற்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14(3) மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

2. **மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :**

மனுதாரர் மேற்படி வழக்கில் 1ம் வாதி என்றும், இம்மனுவை தனக்காகவும் மற்ற மனுதாரர்களுக்காகவும் தாக்கல் செய்துள்ளதாகவும், தாவாவில் குறிப்பிட்டுள்ள கோவில்கள் அனைத்தும் கிராம பொதுக்கோவில் என மனுதாரர்கள் வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருவதாகவும், மேற்படி கோவில்களில் பிடாரி அம்மன் என்கிற மலையம்மன் என்கிற பிடாரி மலையம்மன் கோவில் பொது கோவில் என்றும், மேற்படி கோவில் பொது கோவில் என்று அறிவிக்க சென்னை உயர் நீதிமன்றத்தில் W.P.No.39980/2024 நாள் 06.02.2025 மேற்படி கோவிலில் பெயர் பலகையும், கோவில் குறித்த விளக்கமும் கிரணைட் பெயர் பலகை வைக்க சென்னை உயர்நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு பெயர் பலகை வைக்கக்கூடாது என்று எதிர்மனுதாரர்கள் கோவில் செயல் அலுவலரிடம் ஆட்சேபனை செய்து மிரட்டி வருவதால் போலீஸ் பாதுகாப்பு கோரி சேலம் இந்து சமய அறநிலை ஆட்சித்துறை அலுவலர் அவர்கள் ந.க.எண்.526/2024/இ2, நாள் 20.11.2025—ல் சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு பாதுகாப்பு கொடுக்க கோரி அறிவிப்பு அனுப்பியுள்ளதாகவும், மேற்படி அறிவிப்பை மனுதாரர்கள் தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய வேண்டியது அவசியம் என்றும், மேற்படி உத்தரவு தற்போது தான் மனுதாரர்களுக்கு கிடைக்கப்பெற்றதால் மேற்படி உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து இம்மனுவுடன் தாக்கல் செய்யும் ஆவணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்றும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்து 3, 4, 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்டுள்ள எதிருரையின் சுருக்கம் :**

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார்கள். மேற்படி வழக்கிற்கும், மனுடன் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், மேற்படி வழக்கானது தாவா கோவில்களின் விழாக்களை தொன்றுதொட்டு வரும் நடைமுறைப்படி ஐந்து நாட்டாண்மைகாரர்கள் வகையறா நடத்தும் விழாக்களில் வாதிகளும் மற்ற பொதுமக்களும் கலந்து கொண்டு வழிபாடு செய்யலாம் என்று O.S.678/1987 வழக்கில் தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில் இந்த வழக்கில் பிரதிவாதிகள் தாவா கோவில்களின் விழாக்களை ஏற்பாடு செய்வதற்கும், நடத்துவதற்கும் தடை ஆணை பிறப்பிக்க வேண்டும் என பரிகாரம் கேட்டுள்ள தாவா முன்தீர்ப்பு தடையில் (Resjudicata) தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்று எனவும், மேற்படி தாவா செல்லத்தக்கதல்ல என்று தெரிந்து கொண்ட மனுதாரர் இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என மனு தாக்கல் செய்துள்ளது ஏற்கதக்கதல்ல என்றும், மேற்படி மனுதாரர் ராஜகோபால் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் இந்து அறநிலையத் துறைக்கு சம்மந்தம் இல்லாத அருள்மிகு மலையம்மன் கோவில் முன்புற சுவற்றில் இந்து அறநிலையத்துறைக்கு சம்மந்தப்பட்ட பிடாரி அம்மன் என பெயர் பொறித்த கல்வெட்டால் ஆன பெயர் பலகையை வைக்க அனுமதி வழங்க வேண்டும் என பல தவறான பொய் சங்கதிகளை கூறி W.P.39980/2024 என்ற ரிட் மனுவை தாக்கல் செய்து அதனை விசாரித்த உயர்நீதின்றம் அவ்வாறு கல்வெட்டு வைக்க உத்திரவு வழங்க இயலாது என மேற்படி ரிட் மனுவை தள்ளுபடி செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மேற்படி தள்ளுபடியான உத்திரவை மறைத்து மனுதாரர் இராஜகோபால் காட்டுக்கோட்டை வடசென்னிமலை திருக்கோயில் செயல் அலுவலரிடம் ரிட் மனு தனக்கு ஆதரவாக உத்திரவு பிறப்பித்ததாக தவறான தகவலை கூறியதின் பேரில் அவரும் துணை ஆணையர் அவர்களுக்கு பெயர் பலகை வைக்க பரிந்துரை செய்ததின் பேரில் அவரும் ரிட் மனு தள்ளுபடியான விபரத்தை ஆய்வு செய்யாமல் காவல்துறைக்கு பாதுகாப்பு வழங்க உத்திரவு பிறப்பித்துள்ளதாகவும், மேற்படி தவறான உத்திரவை கேள்விப்பட்டு எதிர்மனுதாரர்கள் உதவி ஆணையர் இந்து அறநிலையத் துறை சேலம் அவர்களை நேரில் சந்தித்து மேற்படி தவறாக

பிறப்பித்த உத்திரவை அமுல்படுத்த வேண்டாம் என தெரிவித்து, அதற்கான மனுவை ஆவணங்களுடன் சமர்ப்பித்ததை ஆய்வு செய்து மேற்படி உத்திரவினை அமுல்படுத்தவில்லை எனவும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணம் அமுல்படுத்த முடியாத ஆவணம் என்பதாலும், வழக்கிற்கு அவசியமற்ற ஆவணம் என்பதாலும், மேற்படி கோவில் விழாக்களை நடத்தவிடாமல் இடையூறு செய்ய மனுதாரர் இராஜகோபால் இவ்வாறு பல பொய்யான மனுக்களை தாக்கல் செய்து வருவதாலும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

4. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர்கள் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.**

5. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவை தாவா சொத்துக்களான நாவுக்குறிச்சி கிராமத்தில் அமைந்துள்ள தாவாவில் குறிப்பிட்டுள்ள கோவில்கள் பொது கோவில்கள் என்றும், தாவா கோவில்களில் பிடாரி மலையம்மன் கோவில் பொது கோவில் என அறிவிக்க கோரி W.P.No.39980/2024ல் 06.02.2025 தேதியிட்ட சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுபடி கோவில் குறித்த விளக்கமும், கிரானைட் பெயர் பலகை வைக்க முற்பட்டபோது எதிர்மனுதாரர்கள் ஆட்சபேனை செய்து மிரட்டி வந்ததால், சேலம் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர் அவர்கள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலர் அவர்களுக்கு போலீஸ் பாதுகாப்பு கோரி அனுப்பிய அறிவிப்பினை தங்களது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்ய வேண்டும் என கோரியுள்ளார்கள்.

மாறாக எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரர்கள் கோரியுள்ள ஆவணமானது இந்த தாவா கோவில்கள் தொடர்புடைய ஆவணம் இல்லை என்றும், மனுதாரர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த W.P.No.39980/2024 மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அதனை மறைத்து மனுதாரர் வடசென்னிமலை காட்டுகோட்டை திருக்கோவில் செயல் அலுவலரிடம் ரிட் மனு தனக்கு ஆதரவாக உத்தரவிடப்பட்டதாக தவறான தகவலை கூறியதன் அடிப்படையில் துணை

ஆணையரிடம் பெயர் பலகை வைக்க பரிந்துரை செய்து அதன் பேரில் காவல் துறைக்கு பாதுகாப்பு வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னிட்டு மேற்படி உத்தரவை செயல்படுத்த வேண்டாம் என மீண்டும் உதவி ஆணையர் இந்து அறநிலையத்துறை சேலம் அவர்களிடம் மனு கொடுத்ததாகவும், எனவே மனுதாரர் மனுவில் கோரியுள்ள ஆவணம் இவ்வழக்கிற்கு பொருந்தாத ஆவணம் என்றும் கூறி ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் இம்மனுவில் தங்கள் தரப்பில் தாக்கல் செய்ய வேண்டும் என கோரியுள்ள ஆவணமானது வழக்குடன் தொடர்புடைய ஆவணம் என்பதாலும், அதன் செல்லும் தன்மை குறித்து எதிர்மனுதாரர்களுக்கு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு உள்ளதாலும், மேற்படி மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதாலும், இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும் இவ்வழக்கானது கடந்த 2004ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருவதையும், வாதி தரப்பு 1ம் சாட்சியை பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருவதை கருத்தில் கொண்டு மனுதாரர் மனுவில் கண்ட ஆவணத்தை வாதி தரப்பு 1ம் சாட்சி குறுக்கு விசாரணை முடிவடைந்த பின்னிட்டு தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

7. தீர்வு:

இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 6–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.02.06 18:19:04 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

1. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

2. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.02.06 18:19:13 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**கூ.மா.உ.நீ. ஆத்தூர்**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண். 16/2026 இன்
அ.வ.எண்.558/2004
நாள் : 06.02.2026